கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

முன்னிலை**:** திரு.ஜி.சரண்**,B.L., P.G.Dip.in Env.Law.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் (முழு கூடுதல் பொறுப்பு)

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் நாள் செவ்வாய்கிழமை.

<u>இடைக்கால மனு எண்**.03/2024**</u>

**-**உள்**-**

அசல் வழக்கு எண்.184/2019

கார்த்திக் ராஜா .. மனுதாரர்/வாதி.

...எதிர்..

1. பி.அழகர்சாமி
2. ஜி.பரமானந்தம்
3.ஜி.அரவிந்தன்
4. சரவணன்
5.சத்யா
6.நாகதேவி
7.பிருந்தா
8.கிருஷ்ணன்
9.சரோஜா,
10.மகேந்திரன்
11.தண்டபாணி
12.தான்தோன்றி கண்ணன்

... 1 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 12 பிரதிவாதிகள்.

13.கே.ரவி
14. கே.முருகானந்தம்

... உத்தேச தரப்பினர்கள்/13,14 எதிர்மனுதாரர்கள்

இந்த இடைக்கால மனு கடந்த 4.3.2025ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P.M.தர்மர், R.கிருஷ்ணமூர்த்தி, P.கணேசன், A.கணேசன் மற்றும் M.முருகன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 13,14 உத்தேச எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.P.ஹரிஹரன் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும்,4 முதல் 12 வரையான எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே அழைத்தும் ஆஜரிண்மையால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த மனுவில் இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

<u>உத்தரவு</u>

1. மனுதாரர்/வாதியால் இம்மனுவானது ஆணை 1, விதி 10(2) மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டு, இம்மனுவில் உத்தேச தரப்பிர்களை 13,14 எதிர்மனுதாரர்களாக மூல வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>:

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது பாகப்பிரிவினை கோரி இந்த மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி, வழக்குரையில் கண்ட 5ம் லக்க சொத்தை பொறுத்து, இந்நிர் மனுவில் கண்ட உத்தேச தரப்பினர்கள் / 13, 14 எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து 9-3-2024ம் தேதி கிரையம் செய்துள்ளார்கள். மேற்படி கிரைய பத்திரமானது சட்டப்படி செல்லாது. இந்த மனுதாரர்/ வாதியால் மனுவில் கண்ட உத்தேசதரப்பினர்கள் /13, 14 எதிர்மனுதாரர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கடந்த 28-06-2024ம் தேதியில் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் அசல் வழக்கில் இம்மனுவில் கண்ட உத்தேசதரப்பினர்கள் / 13, 14 எதிர்மனுதாரர்களை ஒரு கட்சிக்காரர்களாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது, இல்லாதுபோனால் இந்த மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத கஷ்ட நஷ்டங்கள் உண்டாகிவிடும். எனவே மனுப்படி உத்தரவாகவேண்டும்.

3. <u>13ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1,14ம் எதிர்மனுதாரர்களால் தமதென ஒப்புக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு :</u>

மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவை யாவும் பொய் என்று மறுக்கப்படுகின்றது. தாவா பிராதிற்கு 13,14 உத்தேச எதிர்மனதாரர்கள் அசவியமான தரப்பினர்கள் அல்ல. 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து கடந்த 9.3.2024ம் தேதி கிரையம் பெற்ற சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்துக்களை எந்த காலத்திலும் மனுதாரர்/வாதி கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை. தாவா மனுவில் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக சொத்துக்கள் என்று எதுவும் கிடையாது. 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13,14 உத்தேச பிரதிவாதிகள் கடந்த9/3/2024ம் தேதி கிரையம் பெற்ற சொத்துக்கள் 1ம்

எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் டெய்லர் வேலை செய்து அதன் மூலம் கிடைத்த பணத்தை வைத்து கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகும். மேற்படி சொத்துக்களில் மனுதாரர் / வாதிக்கு எந்த காலத்திலும் எந்த விதத்தில் பாத்திய உரிமை ஏற்பட்டது கிடையாது. மேற்படி சொத்துக்களை தாவா பிராதில் சேர்த்துள்ளாதே தவறு ஆகும். அதன் காரணத்தால் வழக்கு Miss Joint of Proper Property என்ற தோசத்திற்கு உட்பட்டுள்ளது. அதன் காரணத்தலேயே தாவா வழக்கு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். தாவா வழக்கு சொத்துக்களை 13,14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13, 14 உத்தேச பிரதிவாதிகள் சரியான மறுபயனுக்கு சட்ட முறைப்படி பதிவு கிரையம் பெற்றுள்ளனர். அதன் காரணத்தால் 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13, 14 உத்தேச பிரதிவாதிகள் Bonafide Purchaser ஆவார்கள். 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13, 14 உத்தேச பிரதிவாதிகளிடமிருந்து மோசடியாக பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், மேற்படியார்களை மன உளைச்சல் ஏற்படுத்தி அழைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தவறான தகவலை மனுதாரர் / வாதி சமூகம் நீதிமன்றத்தில் தெரிவித்து தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் / வாதி சுத்த கரங்களுடன் சமூகம் நீதிமன்றத்தை அனுகவில்லை. தாவா மனுவில் கூடுதல் எதிர்வுரை தாக்கல் செய்யும் உரிமையை 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13, 14 உத்தேச பிரதிவாதிகள் தக்கவைத்துக் கொள்கின்றனர். ஆகையால் இம்மனுவினை 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13, 14 உத்தேச பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி இந்த எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. இனி இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா**?** இல்லையா**?** என்பதேயாகும்.

5. மனுவானது ஆணை 1, விதி 10(1) மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

6. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. பிராது சொத்துக்களில் தனக்குண்டான பாகத்தை பிரித்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாவா வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடந்த 9.3.2024ம் தேதி 1ம் பிரதிவாதி, 13,14 உத்தேச தரப்பினர்களுக்கு வழக்குரையில் கண்ட 5ம் இலக்க சொத்தை கிரையம் செய்துகொடுத்துள்ளதாகவும், இந்த

கிரையம் இந்த வாதியை கட்டுப்படுத்தாது என்றும், எனவே 13 மற்றும் 14 உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 13, 14ம் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்தவேண்டியது மிகவும் அவசியமாகிறது என்றும் இல்லாவிடில் வாதிக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு ஏற்படும் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

7. 1,13 மற்றும் 14 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிராது 5ம் இலக்க சொத்தானது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும் மேற்படி சொத்தில் எந்த காலத்திலும் மனுதாரர்/வாதி கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை என்றும் தாவா மனுவில் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக சொத்துக்கள் என்று எதுவும் கிடையாது என்றும், 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் கடந்த9/3/2024ம் தேதி கிரையம் பெற்ற சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் டெய்லர் வேலை செய்து அதன் மூலம் கிடைத்த பணத்தை வைத்து கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றும் மேற்படி சொத்துக்களில் மனுதாரர் / வாதிக்கு எந்த காலத்திலும் எந்த விதத்திலும் பாத்திய உரிமை ஏற்படவில்லை என்றும், மேற்படி சொத்துக்களை தாவா பிராதில் சேர்த்துள்ளாதே தவறு என்றும், தாவா வழக்கு சொத்துக்களை 13,14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13, 14 உத்தேச பிரதிவாதிகள் சரியான மறுபயனுக்கு சட்ட முறைப்படி பதிவு கிரையம் பெற்றுள்ளனர் என்றும் அதனால் 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13, 14 உத்தேச பிரதிவாதிகள் Bonafide Purchaser ஆவார்கள் என்றும் 13, 14 உத்தேச எதிர்மனுதாரர்கள் / 13, 14 உத்தேச பிரதிவாதிகளிட-மிருந்து மோசடியாக பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், மேற்படியார்களை மன உளைச்சல் ஏற்படுத்தி அலைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

8. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும் போது, தாவா வழக்கானது 21-8-2019ம் தேதி பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது கடந்த 9.3.2024ம் தேதி 1ம் பிரதிவாதி, 13,14 உத்தேச தரப்பினர்களுக்கு வழக்குரையில் கண்ட 5ம் இலக்க சொத்தை கிரையம் செய்துகொடுத்துள்ளதாகவும், எனவே 13,14 உத்தேச தரப்பினர்கள் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றும் எனவே 13 மற்றம் 14ம் உத்தேச தரப்பினர்கயளை அசல் வழக்கில் 13,14ம் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்தவேண்டியுள்ளதென்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 1,13

மற்றும் 14 எதிர்மனுதாரர்கள் பிராது 5ம் இலக்கச் சொத்தானது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும் எனவே தாங்கள் bonafide purchasers என்றும் ஆகையால் இந்த 13,14 உத்தேச தரப்பினர்கள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றும் வாதிடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இதுகுறித்து காண்கையில் வாதியானர் தாவா சொத்துக்களில் பாகம் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ள நிலையில் அதில் உள்ள சொத்துக்கள் தனிப்பட்ட சொத்துக்களா? அல்லது பூர்வீக சொத்துக்களா? என்பது குறித்து இவ்வழக்கில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்து இருதரப்பும் தங்களது வழக்கினை ருசு செய்யும்போதுதான் அறியமுடியும். எனவே தற்போதைய நிலையில் 5ம் இலக்கச்சொத்தின் உண்மைத் தன்மை குறித்து இருவேறு கருத்துக்கள் உள்ள இத்தகைய சூழலில் 13, மற்றும் 14 உத்தேச தரப்பினர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து இருதரப்பிலும் சாட்சியங்கள் விடப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்து நிரூபிக்கும்போதே இந்நீதிமன்றம் இவ்வழக்கில் தெளிவானதொரு தீர்ப்பினை பகர இயலும். ஆகையல் இத்தகைய சூழலில் அசல் வழக்கினை மேல்நடத்த 13 மற்றும் 14 உத்தேச தரப்பினர்களை 13,14 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் சேர்க்க உத்தரவிடுவதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11-ஆம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.03.11 18:26:39 +0530
கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).

<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.03.11 18:26:47 +0530
கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்
இ**.**நிலை மனு எண்**.03/2024**
**-உள்-**
அசல் வழக்கு எண்.184/2019
நாள் -11.3.2025
அசல் /நகல் உத்தரவு

<u>இடைக்கால மனு எண்.**03/2024**</u>

-உள்-

அசல் வழக்கு எண்.184/2019

**11.3.2025**

உத்தரைவு அவையறிய பகரப்பட்டது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.03.11 18:26:58 +0530

கூ.மா.நீ(முகூபொ)

திண்டுக்கல்.